பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 19 செவ்வாய்க்கிழமை (01-04 1997) UTHAYAN A Lively National Tamil Daily, கதிர்: 125

## தந்தை செல்வாவின் ஜனன தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

### நகரில் நினைவுத் தூபிக்கு மக்கள் மலரஞ்சலி

திருநெல்வேலி, ஏப்.1

தந்தை செல்வாவின் நூற்றாண்டுப் பிறந்த தினம் நேற்று யாழ் நகரில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை ஒட்டி யாழ். முற்றவெளியில் உள்ள தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது. 'புளொட்' அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

(8 ஆம் பக்க பார்க்க)

## கொக்குவில் பகுதியில் கிளைமோர் தாக்குதல்

### இரு படையினர் உயிரிழப்பு

கொக்குவில், ஏப். 1

கொக்குவில் மஞ்சவனப்பதி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம் பெற்ற கிளைமோர் கண்ணித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் உயிரிழந்ததாக அறியவருகின்றது.

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பின்னர் திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த கிளைமோர் தாக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் கூட்டணி-முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அலகு குறித்து இணக்கம்!

## பிந்திய செய்தி

## கருணாநிதி புதியபிரதமர்



புதுடில்லி, ஏப். 1

தேவகௌடா தலைமையிலான இந்திய அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதன் மூலம் அந்த அரசை கவிழ்க்க முன்வந்துள்ள காங்கிரஸ் கட்சி —

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தலைமையில் அமைக்கப்படக்கூடிய கூட்டணி அரசு ஒன்றில் இடம் பெறத் தயாராக இருப்பதாக அறிவிக்கின்றது.

நேற்று நள்ளிரவு புதுடில்லியில் வெளியான ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

இதனையடுத்து, அடுத்து வரும் தினங்களில் புதிய கூட்டணி அரசின் பிரதமராக கலைஞர் கருணாநிதி பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் தீர்வுத் திட்டத்திலும் இதுவே இடம்பெறுமாம்

கொழும்பு, ஏப்ரல் 1

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான இழுபறியால் அதிகாரப் பகிர்வுக்கான ஆட்சி அலகு குறித்து சர்ச்சை எழுந்துள்ள இவ்வேளையில் -

ஆட்சி அலகு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றன.

இந்த இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ள ஆட்சி அலகையே தனது தீர்வுத் திட்டத்திலும் முன்வைப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எந்தத் தீர்வுத் திட்டமும் வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டு, அதனடிப் படையில் அமைந்ததாக இருக்க வேண்டும் என தமிழ்க் கட்சிகள் விடாப்பிடியாக வற்புறுத்தி வருகின்றன.

அதேசமயம் வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்க முடியாது என சிங்கள தீவிரவாத சக்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு புலிகள் முன்வைத்த ஆலோசனை அரசால் நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 1

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சில நிபந்தனைகள் மற்றும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்தலாம் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையை இலங்கை அரசு நிராகரித்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆலோசனையில் புதிதாக ஒன்றுமில்லை என்றும் இலங்கை அரசு குறிப்பிட்டிருக்கின்றது.

★ வடக்கில் 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கைக்கு முன் இருந்த நிலைகளுக்கு படை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாக் கடல் ஊடாக மேலும் 754 பேர் நேற்று குருநகர் வருகை

குருநகர், ஏப். 1

வன்னியில் இருந்து மேலும் பல குடும்பங்களைச் சேர்ந்த 754 பேர் குடாக்கடல் ஊடாக நேற்று குருநகரை வந்தடைந்தனர்.

23 வள்ளங்களிலும் 26 பிளாஸ்ரிக் படகுகளிலும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டவாறு இவர்கள் வந்தடைந்தனர்.

அகதிகளை ஏற்றிக்கொண்டு வள்ளங்கள் நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை அடுத்தடுத்து குருநகர் இறங்கு துறையை வந்தடைந்த வண்ணம் இருந்தன.

இவர்களின் விவரங்களைப் பதிவுசெய்து உடனுக்குடன் சிநோர் வலைத் தொழிற்சாலைக்கு அவர்களை அனுப்பி வைக்கும் பணியில் கிராம சேவகர்களும், யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரும் மும்முரமாக ஈடுபட்டனர்.

சொந்தமாக வள்ளங்களை வைத்திருந்தோர் தத்தமது பொருள்களுடன் சுலபமாக வந்து சேர்ந்துள்ளனர் என்றும்—

ஏனையோர் 250 ரூபா முதல் 500 ரூபாவரை பணம் செலுத்தி வள்ளங்களில் இடம் பிடித்ததாகவும் பயணி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று வந்துசேர்ந்துள்ள குடும்பங்களில் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளையும் சேர்ந்தோர் அடங்கியுள்ளனர்.

(ஐ-51)

## வானொலி கருவியைப் பயன்படுத்த 'மேர்லின்' குழுவுக்கு அனுமதி மறுப்பு

### மருத்துவ சேவையை இங்கு ஆரம்பிக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஏப். 1

சர்வதேச அவசர மருத்துவ உதவி நிறுவனமான 'மேர்லின்' அமைப்பு யாழ்ப்பாணத்தில் தொண்டு நிறுவனப் பணியில் ஈடுபடுவதாயின் தனக்கு யாழ்ப்பாணத்தில் வானொலித் தொலைத் தொடர்புக் கருவியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தியிருக்கின்றது.

ஆனால் இக்கோரிக்கையை ஏற்பதற்கு அரசு பின்னடித்து வருவதால் யாழ்ப்பாணத்தில் தனது மருத்துவப் பணிகளை ஆரம்பிக்க 'மேர்லின்' அமைப்பு பின்னிற்பதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வேறு ஆறு சர்வதேச அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் இத்தகைய வானொலிக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மருத்துவப் பணியில் ஈடுபடுமாறு அரசு விடுத்த கோரிக்கையை அடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் யாழ். மருத்துவ பீட மாணவருக்கு ஆஸ்பத்திரியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 1

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு இன்றும் நாளை புதன்கிழமையும் கப்பல் சேவைகள் இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CELCE
**Centre for English Language and Computer Education**

**CIMA Stage - I**
(IN JAFFNA TOWN)

**Commencement: 05-04-1997**

Registered students and those who wish to entrol are requested to attend the orientation session at 10.00 a.m. Saturday **05-04-97** at the Centre.

**Minimum Requirments:**
G. C. E A/L 2 Credits and G. C. E. O/L 3 Credits including Maths & English.

**Managing Director.**

533, Palaly Road,
Thirunelvely, Jaffna. (46092)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா இரத்தினம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இரத்தினம் 13-03-97 அன்று வன்னியில் அகால மரணமடைந்து விட்டார்.

இவர் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மதேவன், மகேந்திரன், உதயகுமார், சாந்தகுமாரி, காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் சிவகுமார், அருந்ததி, கற்பகநாதன், சசிகுமார், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகம்மா, இந்திராணி, ஜெயராணி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், உதயரூபன், தனீஸ்வரன், சசிகரன், தயாபரன், சாளினி, வாசன். கேசன், பிரபு, தர்சிகா, தமோனுதன், யானுதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14-03-97 அன்று முத்தையன் கட்டில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்;
**பிள்ளைகள்**

விதானையார் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
இருபாலை. (46091)

## திருமதி கண்மணி லோறன்ஸ்

மானிப்பாய் தெற்கு, லோட்டன்ஸ் வீதியை,ச் சேர்ந்த திருமதி கண்மணி லோறன்ஸ் 21-3-1997 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வில்லியம் லோறன்ஸின் மனைவியும், காலஞ்சென்ற சன்னா, ராணி, பபி, ராசாத்தி, றாஜன், காலஞ்சென்ற இன்றோ ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற ஞானசிகாமணி அன்னப்பாவின் சகோதரியும், காலஞ்சென்ற தேவி, சிங்கநாயகம் மற்றும் மகேஸ். டானியேல் ஆகியோரின் மைத்துனியுமாவார். நல்லடக்கம் 26-03-1997 அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது,

தகவல்:
**இந்திராணி சிங்கநாயகம்**
(மருமகள்)

உடுவில் வீதி;
மானிப்பாய். (9452)

## திருமதி கமலாதேவி கிருஷ்ணபிள்ளை
(உரிமையாளர், கிருஷ்ணா கபே, அச்சுவேலி)

பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும், அச்சவேலியை வசிப்பிடமாகவும், தற்பொழுது பிறவுண் வீதியில் வசித்தவருமான கமலாதேவி கிருஷ்ணபிள்ளை 30-3-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி. கிருஷ்ணபிள்ளையின் (கிருஷ்ணா கபே) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் — வாலாம்பிகையின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னையாவின் மருமகளும் மற்றும் திருமதி நி. வரலட்சுமி, கி. வரதராஜா, காலஞ்சென்ற கி. ஸ்ரீதரன் மற்றும் கி. ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வ. நித்தியானந்தன் (மருந்தாளர், ஓமான்) திருமதி வ. தமயந்தி, திருமதி ஸ்ரீ. மீரா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், நி. துஷ்யந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), நி. சுதர்ஷினி (மாணவி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), வ. பார்த்தீபன் வ. லக்ஷ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சோ. சேதுபதி, திருமதி க. இராசரட்ணம், திருமதி சோ. செல்வராஜா, திருமதி ம. இராஜலிங்கம், சோ. முருகையா, சோ. மகாதேவன், திருமதி உ. ரஞ்சித் (கனடா), சோ. பரமேஸ்வரி, சோ. வெற்றிவேல் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற திருமதி ஆ. சேதுப்பிள்ளை மற்றும் திருமதி ரா. சின்னம்மா, காலஞ்சென்ற திருமதி செ. செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(01-04-97) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி வ. நித்தியானந்தன்**
(மகள்)

120, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (46094)

## படையினர் கட்டுப்பாட்டில் இல்லை

கொழும்பு, ஏப் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, வவுணதீவு, பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லை என்று மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சண்முகம் தெரிவித்ததாக ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், எரிபொருள், சிமெந்து உரம் போன்றவை எடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (உ-150-3)

## கொள்ளையர் பிடிபட்டனர்

கொழும்பு, ஏப். 1

இராணுவ சீருடையில் சென்று பல இடங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

றாகம, களனி, கிரிபத்கொட, கடவத்தை ஆகிய இடங்களில் கொள்ளைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இந்தக் கோஷ்டி பொலீஸாரிடம் சிக்கியுள்ளது.

கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேகநபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (உ-3-150)

## தொண்டர் ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடந்த 91 ஆம் ஆண்டு முதல் 95 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய சகல ஆசிரியர்களையும் அவர்களது விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அடையாள அட்டை, சேவை விவரம் தொடர்பான அதிபரின் சான்றிதழ், ஆண்டுதோறும் கற்பித்த வகுப்புகளும், அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட நேரசூசிகள், பங்குபற்றிய சேவைக்காலக் கருத்தரங்குகள் தொடர்பான சான்றிதழ்கள், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியனவற்றை தம்முடன் எடுத்து வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**வெளிவந்துவிட்டது**

**புதிய சுகாதாரக்கல்வி வினாவிடை ஆண்டு 8**
விலை ரூபா 45/-
வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**
(46099)

**NEW SCIENCE ACADEMY, NALLUR.**

**A/L 97/98**

**கணக்கியல்:**
**திரு. பாலவாசன்**
“கைவிருப்பு மதிப்பீடு”
ஆரம்பம்: 03 - 04 - 97
நேரம் 6.30 (46098)

## வ.பி.போ.ச. பஸ் சாரதி எச்சரிக்கப்பட்டார்!

தென்மராட்சி, ஏப். 1

கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில் வரை சென்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணம் செய்த சாவகச்சேரி மாவட்ட நீதிபதியை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டதாகக் கூறப்படும் பஸ் சாரதி சாவகச்சேரி பொலீஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

பஸ் சாரதி தான் நடந்து கொண்ட முறைக்கு மனம் வருந்தித் தனது தவறினை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரியதால் மாவட்ட நீதிபதி எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் சாரதி மீது மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டாமெனப் பொலீஸாரைப் பணித்து, குறித்தசாரதியைக் கடுமையாக எச்சரிக்கை செய்து அனுப்பினார்.

மன்றில் சமுகமளித்திருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை யாழ். சாலை அத்தியட்சகர் மனோகரனிடம் பஸ்ஸில் பயணஞ் செய்யும் பயணிகளுடன் சாரதிகள் மரியாதையாகவும் பண்பாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்பதை மாவட்ட நீதிபதி வற்புறுத்தி இதனை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறும் பணித்தார். (உ-117)

## பாவனையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

பாவனையாளர்களின் உரிமைகளையும் நலன்களையும் பேணும் வகையில், யாழ்ப்பாணத்தில் பாவனைப் பொருள்களின் திடீர் விலையேற்றம், தரம், குறைபாடுகள் பற்றிய முறைப்பாடுகளை, விவரமாக தகுந்த ஆதாரத்துடன் எமக்குக் கடித மூலமாகவோ நேரடியாகவோ அறியத் தருமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்,
**நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்.**

07, இரத்தினம் லேன்,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (46093)

## மகாஜனக் கல்லூரி,
**தெல்லிப்பழை.**

**முறைசாராக் கல்வி தொழிற்திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறி 1997**

பயிற்சி நெறிகள்
(1) ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து
(2) வானொலியும், ரி. வி. பராமரிப்பும்

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரியிற் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி **08-04-1997**. நேர்முகக் கலந்துரையாடல் 12-4-1997 இல் கல்லூரியில் இடம்பெறும். இப்பயிற்சி நெறிக்கான போதனாசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாடசாலையைவிட்டு விலகியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**க. நாகராசா**
அதிபர்

யா / மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. (சி/401)

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி,
**மானிப்பாய்.**

கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்படும்:

1) ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து.
2) படவரைஞர் (ஆங்கிலம்)
3) மின்சார இலத்திரனியல்.

விண்ணப்ப முடிவு திகதி: **10-04-1997** (வியாழன்)
நேர்முகப் பரீட்சை: **11-04-1997** (வெள்ளி)
பயிற்சிகள் ஆரம்பம்: **16-04-1997** (புதன்)

**- அதிபர்**

31-03-1997 (சி/402)

## யா/இராமநாதன் கல்லூரி
**முறைசாராக் கல்வி தொழிற்திறன் அபிவிருத்திப் பயிற்சி-1997**

முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும்

1) மூலிகைப் பண்ணை
2) வீட்டு முகாமைத்துவம்

ஆகிய பயிற்சி நெறிகளுக்கு பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கானவிண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று **07-04-1997** க்கு முன்விண்ணப்பிக்கவும்.

**அதிபர்**
**யா/இராமநாதன் கல்லூரி.**

(சி/403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு பணயக் கைதிகள் விவகாரம்

# தீருவதற்கான அறிகுறி இல்லை

## இரு தரப்பினரும் நம்பிக்கை இழப்பு

லீமா, ஏப். 1

103 நாள்களாக நீடிக்கும் ஜப்பானியத் தூதரக பணயக் கைதிகள் விவகாரத்துக்கு உடனடித் தீர்வு கிட்டும் சாத்தியமில்லை என பெருநாட்டு அதிபர் அல்பேட்டா ரிஜிமோறி தெரிவித்தார்.

ஆயினும் இப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காணும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஜப்பானியத் தூதரகத்தில் 72 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் ''துப்பக் அமாறு'' போராளிகளின் தலைவரும் நெருக்கடிக்கு உடனடித்தீர்வு காணும் வாய்ப்புக்கள் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

பெரு நாட்டுச் சிறைகளில் உள்ள தங்கள் சகாக்களான சுமார்-400பேரை பெருஅரசு விடுதலை செய்ய வேண்டும் என்பதே போராளிகளின் கோரிக்கை ஆகும்.

400க்கும் மேற்பட்டவர்களை போராளிகள் பணயக் கைதிகளாகப் பிடித்ததும்—

பின்னர் படிப்படியாக பலர் விடுதலை செய்யப்பட தற்போது 72 பேர் மட்டும் எஞ்சி இருப்பதும் தெரிந்தவையே. (இ-10)

## படகு விபத்தில்

# 100-க்கு மேற்பட்ட அல்பேனியர் பலி?

பிரிண்டிசி, ஏப். 1

அட்ரியாட்டிக் கடலில் அல்பேனிய அகதிகளுடன் மூழ்கிய படகில் இருந்தவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும் நான்கு சடலங்கள் மட்டுமே இதுவரை மீட்கப்பட்டன. இந்தப் படகில் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நீரில் மூழ்கிப்போனவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் சிறுவர்களும் என்று உயிர் தப்பியோர் தெரிவித்தனர்.

இத்தாலிக் கரைக்கு அப்பால் 35 மைல் தொலைவில் இப்படகு மூழ்கியது.

இத்தாலியப் போர்க்கப்பல் ஒன்றுடன் மோதியே இந்தப் படகு கவிழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

மோசமான காலநிலை காரணமாக மீட்புப் பணி நேற்று முன்தினம் இடை நிறுத்தப்பட்டிருந்தது. (ஐ)

# பன்னாட்டுப் படைகளை ஏற்க அல்பேனிய நாடாளுமன்று முடிவு

தெரானா, ஏப். 1

அல்பேனிய நாடாளுமன்றம் பன்னாட்டுப் படையை ஏற்றுக்கொள்வது என முடிவு செய்துள்ளது.

இத்தாலியின் தலைமையில் சுமார் 2 ஆயிரத்து 500 படையினரை அல்பேனியாவுக்கு அனுப்புவது என ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

இந்தப் படையின் முதல் அணி இவ்வாரம் அல்பேனியாவுக்கு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அல்பேனிய அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடந்த வெள்ளியன்று இத்தாலிய கடற்படைக் கப்பலுடன் மோதியதில் 80 அல்பேனியர்கள் மாண்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# உலக அரங்கில்

## தொழிற்கட்சி தலைவர் உறுதி

மே மாதம் நடைபெறும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் தமது கட்சி வெற்றி பெற்றால் வேலை நிறுத்தங்களும் ஆட்சியில் தொழிற் சங்கங்களின் தலையீடுகளும் இருக்காது என பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் ரொனி பிளயர் தெரிவித்தார்.

கட்சியின் கொள்கைகளிலும்அமைப்புகளிலும் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

தொழிற் சங்க அமைப்புகளுடன் தனது கட்சி கொண்டிருந்த உறவில் தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ரொனி பிளயர் சொன்னார். (இ-10)

## தென் ஆபிரிக்காவில்

# 'ஈஸ்டர்' விழா நாள்களில் 206 பேர் வீதி விபத்தில் பலி

கேப்ரவுண், ஏப். 1

தென் ஆபிரிக்காவில் ஈஸ்டர் விழாவையொட்டிய இறுதி மூன்று நாள்களில் இடம் பெற்ற வீதி விபத்துக்களில் 206 பேர் மாண்டனர்.

மோரியா நகர் தேவாலயத்தில் நடைபெற்ற ஈஸ்டர் பெருவிழாக் கொண்டாட்டங்களில் 30 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# பலஸ்தீனர் ஆர்ப்பாட்டம்

கிழக்கு ஜெருசலேம் பகுதியில் இஸ்ரேல் அரசு அமைத்துவரும் யூதக் குடியிருப்புக் கட்டுமானப் பணிகளை நிறுத்தக் கோரி ஆயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் கடந்த ஞாயிறன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ''பூமிதினம்'' என அவர்கள் பெயரிட்டிருந்தனர். இஸ்ரேலின் தேசியக் கொடியை போராட்டக்காரர்கள் தீயிட்டுக் கொழுத்தினார்கள்.

இதற்கிடையில் ஞாயிறன்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கூடிய அரபு லீக் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் இஸ்ரேலுடனான உறவுகளை முறித்துக்கொள்ள பரிந்துரைத்துள்ளது. (இ-10)

# பார்வையாளர் அரங்கு உடைந்து கேரளாவில் 200 பேர் காயம்!

திருவனந்தபுரம், ஏப். 1

கேரளமாநிலம் வட புரா நகரில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற தேசிய கரப்பந்தாட்டப் போட்டியின் போது பார்வையாளர் இருக்கை அரங்கு உடைந்து விழுந்ததால் சுமார் 200 பேர் காயமடைந்தனர். இவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக பி.ரி.ஐ. செய்தி தெரிவிக்கிறது.

விபத்தினைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த பார்வையாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். விளையாட்டு அரங்கு தீயிடப்பட்டது. போட்டி அமைப்பாளர்களின் வாகனங்கள் பல அடித்து நொருக்கப்பட்டன.

## இந்திய-பாகிஸ்தான்

# பேச்சுவார்த்தை விடயங்கள் அந்தரங்கமாகவே வைக்கப்படும்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்தில் கடந்த மூன்று நாள்கள் நடைபெற்ற பேச்சுக்கள் இன்று முடிவடையும்.

பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலாளர் சம்சத் அகமட் இந்தியப் பிரதமர் தேவகௌடாவையும், வெளிவிவகார அமைச்சர் குஜ்ராலையும் மரியாதையின் நிமித்தம் நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு பாரம்பரியமான வழக்கமே எனினும் முதற்கட்டப் பேச்சுக்கள் மோசமான நிலையைச் சந்திக்கவில்லை என்பதையும் இது காட்டுகிறது என்று அவதானிகள் குறிப்பிட்டனர்.

இந்தப் பேச்சுக்களில் காஷ்மீர் விவகாரம் குறித்து முன்னேற்றம் எதும் ஏற்படும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

காஷ்மீர் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று தனது நிலைப்பாட்டை பாகிஸ்தான் மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்றே தெரிகிறது.

பேச்சுவார்த்தைகள் முடியும் வரை பேசப்படும் விவரங்களை அந்தரங்கமாக வைத்திருக்கும் கொள்கையை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டிருப்பதால் முதற்கட்டபேச்சுக்கள் குறித்து விவரமான விளக்கங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை. (ஐ)

## 6 மாணவர்கள் சுட்டுக்கொலை

ஏமன் நாட்டில் தானியங்கி ஆயுதம் ஒன்றை வைத்திருந்த ஒருவர் தலைநகர் சானாவிலுள்ள இரண்டு பாடசாலைகளில் குறைந்தது 6 பேரைக் கொலை செய்துள்ளார். மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

மனநோயாளியான இவரைப் பொலீஸார் தாக்கிக் காயமடையச் செய்த பின்னர் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதத்துக்கு உதவாதீர்; இந்தியா பாகிஸ்தானிடம் கோரிக்கை

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எல்லைக்கு அப்பால் இருந்து மேற்கொள்ளப்படும் பயங்கரவாதச் செயல்களுக்கு உதவி செய்வதையும், துணைபோவதையும் உடனடியாக நிறுத்திவிடுமாறு பாகிஸ்தான் அரசை இந்தியா கேட்டிருக்கிறது.

இருநாட்டு வெளியுறவுச் செயலர்களுக்கும் இடையே புதுடில்லியில் நடந்த பேச்சுக்களின் போதே இந்திய அரசுத்தரப்பில் இருந்து மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

முதல் நாள் பேச்சுக்கள் சுமுகமான முறையில் இடம்பெற்றன — என்று இரு நாட்டுப் பிரதிநிதிகளும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இந்தியத்துணைக் கண்டத்தின் பதற்றத்தைத் தணிக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படும் இப்பேச்சுவார்த்தை நாளைவரை தொடர்ந்து நடைபெறும்.

இதேவேளை — பேச்சுவார்த்தைகளில் தங்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்று கோரி காஷ்மீர் பள்ளத்தாக்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளன. (ஐ)

# வடமராட்சி கிழக்கில் திருத்தப்படாத வீதிகள்

## போக்குவரத்து பெருமளவு பாதிப்பு

தென்மராட்சி, ஏப். 1

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிச் சந்தியிலிருந்து புதுக்காட்டுச் சந்திக்கும் பருத்தித்துறைக்கும் செல்லும் வீதிகள் பல வருடங்களாக திருத்தப்படவில்லை.

இந்த வீதிகளைத் திருத்த கற்கள் பல தடவைகள் பறிக்கப்பட்டபோதிலும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வீதிகளில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் மருதங்கேணி, உடுத்துறைப் பகுதி மக்கள் 1991 ஆம் ஆண்டு இவ்வீதிகளில் களிமண் போட்டு வீதிகளை ஓரளவு செப்பமிட்டிருந்தனர்.

தற்பொழுது களிமண்ணும் மழையில் அள்ளிச் செல்லப்பட்டதால் மீண்டும் இந்த வீதிகள் குண்டும் குழிரியுமாக காணப்படுவதாக தெவிக்கப்படுகிறது. (இ-117)

## உலர் உணவு

செம்பியன்பற்று, ஏப். 1

வன்னி பெருநிலப் பரப்பில் இருந்து வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மீளக்குடியமரும் மக்களுக்கு மூன்று நாள்களுக்குள் நிவாரணப்பொருள்களை வழங்க பிரதேச செயலக புனர்வாழ்வு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வீதி திறப்பு

விளான் சந்தியூடாக இளவாலைக்குச் செல்லும் வீதி திறக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு முதல் இவ் வீதி மூடப்பட்டிருந்தது. இந்த வீதி திறக்கப்பட்டதால் இளவாலைக்கு மக்கள் சுலபமாக செல்ல முடிகிறது.

## மாணவிக்கு கண் அழுத்தம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தென்மராட்சிப் பிரிவு பாடசாலைகளில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாம்களில் கண்ணில் கோளாறு காரணமாக தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமையாழ். போதனா வைத்தியசாலையில் கண்பரிசோதனை நடத்தப்பட்டது. அப்பொழுது 10 வயது மாணவி ஒருவரின் கண்ணில் இரத்த அழுத்தம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த சிகிச்சை முகாமில் ஒரு மாணவிக்கு கண் சத்திர சிகிச்சை செய்யவும் 7 மாணவர்களுக்கு கண்ணாடி வழங்கவும், 8 மாணவர்களுக்கு மருந்துகள் பாவிக்கவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக லயன்ஸ் கழகத் தலைவர் [illegible] நாதன் தெரிவித்தார். (இ-117)

# இளைஞர் பிரச்சினையைத் தீர்க்க அரசுகள் கவனம் எடுக்கவில்லை

## சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 1

''இளைஞர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை முன்னைய அரசாங்கங்கள் கவனத்தில் எடுக்கத்தவறி இருந்தன. இதனாலேயே வடக்கிலும், தெற்கிலும் இளைஞர்கள் கிளர்ச்சியாளர்களாக மாறும் நிலை ஏற்பட்டது. தமது முன்னேற்றத்துக்கு வேண்டிய வேலை வாய்ப்பு இல்லாமையும் ஏனைய சந்தர்ப்பங்கள் இல்லாமையுமே அவர்களை விரக்தி நிலைக்கு உள்ளாக்கியது. இந்த நிலையே அரசுக்கு எதிராக அவர்களை ஆயுதங்களைத் தூக்கச் செய்தது''

கடந்த வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய இளைஞர் விருது வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## சனசமூக நிலையம் புனரமைப்பு

கொழும்புத்துறை, ஏப்ரல்1

யாழ். நீர்வேலி தெற்கு ஸ்ரீல ஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையம் கடந்த கால யுத்த அனர்த்தங்களின் பின் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது

வாசிகசாலை அண்மையில் செயல்பட ஆரம்பித்துள்ளது. (இ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பேக்கரிக்கு தேவையான கேக் பேப்பர்கப் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. குருபரன் 315 C, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. [46057]

நல்ல நிலையில் பெற்றோல் பாவனையுடன் உள்ள, யமகா மேட் 90 (Yamaha-Mate 90) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 38, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (ஜொய்சி பேக்கவுஸ் அருகாமை). [46078]

நல்ல நிலையிலுள்ள ஸ்கூட்டர் (இத்தாலி வெஸ்பா சுப்பர்), சிசில் குளிர்சாதனப் பெட்டி, பெண்கள் துவிச்சக்கரவண்டி, மற்றும் வீட்டுத் தளபாடங்கள்என்பன நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. V. கணேசரட்ணம், கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. [46081]

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, சாவகச்சேரி. (45932)

### தவறி விட்டன

சண்முகநாதன் கணபதிப்பிள்ளை இல. 511272998V தேசிய அடையாள அட்டையும், செல்லம்மா, சந்திரிகா, ஆகியோரின் அடையாள அட்டைகளும் பேர்ஸுடன் நாயன்மார் கட்டு வீதிக்கும், கல்வியங்காட்டு வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சச்சிதானந்தம், 202, கோயில் வீதி, கைலாச பிள்ளையார் கோயில் முன்கடை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [46071]

### ஜோதிடம்

விவாகத்தடை, பிரயாணத் தடை, கல்வித் தடை, குடும்பப் பிரச்சினை தீர, பிரிந்தவர் சேர ஆலோசனை வழங்கப்படும்; பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும், குருக்கள், பொய்யாமொழி ஜோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். (46086)

### தேவை

பாவிக்கக்கூடியநல்ல நிலையிலுள்ள றோனியோ, தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் தேவை. பூரண விவரங்களுடன் தொடர்பு: கல்வயல் இந்து இளைஞர் மன்றம் கல்வயல், சாவகச்சேரி. (46084)

## ப. நோ. கூ. ச. கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 1

பச்சிலைப்பள்ளி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு சங்க கூட்டுறவு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-4)

## பொது நூலகம் மூடப்பட்டது

செம்பியன்பற்று, ஏப். 1

செம்பியன்பற்று தெற்கில் உள்ள பொது நூல் நிலையம் மூடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் மாணவர்கள் பொது மக்கள் தொடர்பு கொண்டும் பயன் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-36)

---


நினைவூட்டுகின்றோம் உங்கள் நெஞ்சங்களில்!

**சிற்றியின் தங்க நாணய பரிசுத் திட்டம்**

பொங்கல் திருநாளில் ஆரம்பமாகி, சித்திரைப் புது வருட நன்னாளில்! அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவு செய்யவிருக்கும் எங்கள் சிற்றியின் தங்க நாணயப் பரிசுத் திட்டத்தில் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள்.

அழகுக்கு அழகு தரும் ஆடைகளின் சங்கமம்

**சிற்றி காமன்ஸ் & ரெக்ஸ்ரைல்ஸ்**

**பலாலி வீதி, திருநெல்வேலி.**

(45551)


---

## கண்ணீர் அஞ்சலி

### அருட்தந்தை S. H. ஜெபநேசன்

(முன்னாள் பேராலய பங்குத்தந்தை மனித மு. ந. நி. இயக்குநர்.)

பணிவாழ்விலும், பின்தங்கிய மாணவரின் கல்வி முன்னேற்றத்திலும் நற்பணியாற்றிய அருட்தந்தை S.H. ஜெபநேசன் அடிகளாரின் ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

இவரது மறைவை யொட்டித் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் மேதகு யாழ். ஆயருக்கும், சக குருக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர், மாணவர்**
**யா/ புனித சாள்ஸ் ம. வி.**

(46080)

---

## ஓராண்டு கால நீங்காத நினைவு

### அமரர் சி. பற்குணம்

(B. A. HONS., S. L. A. S. CL.I)

தோற்றம்,
03—04 1944

அமரத்துவம்:
01—04—1996

அன்பாக வடிவெடுத்து அணையாத விளக்காகி
மங்காத புகழுடன் மடிந்து விட்ட மாதவனே
ஒன்றாக வாழ்ந்து விட்ட காலங்கள் எம்கண்ணில்
நின்றாடுகின்றனவே நினைவெல்லாம் உன்நிழலாய்
இன்றோடு ஓராண்டு நிறைவு கண்ட போதிலும்
குன்றாது உன்நினைவு குவலயத்தில் நாம்வாழும்வரை.

உடன் பிறப்புகள்:
திரு. சி. யோகசிங்கம் - அதிபர்
திரு. சி. வேலையா - லிகிதர்
திரு. சி. இரத்தினசிங்கம் பதில் முகாமையாளர்
திரு. சி. சிவபாதசுந்தரம் பிரதம லிகிதர்
திரு. சி. வீரசிங்கம் - கிராமசேவகர்
திரு. சி. விஜயபாஸ்கரன் - கனடா

(சி/ 392)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

யா/ மானிப்பாய்மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியை செல்வி

**சிவயோகவதனி சிற்றம்பலம்**

அவர்களின் அன்புத் தந்தையார்

மலர்வு: 25 — 03 — 1925



உதிர்வு: 12 — 04 — 1996

மாவிட்டபுரம் தெற்கைச் சேர்ந்த

### அமரர் மயில்வாகனம் சிற்றம்பலம்

(ஓய்வு பெற்ற ஓவசியர்)

திதி: 01—04—1997

என்றும் துணையாய் எமக்கிருப்பார் தந்தை என
நின்ற துணிவு நிழலாச்சே — தன் கடமை
தான் செய்ய துடித்து நின்ற தலைமகன்
கனடாவில் கதிகலங்கி நிற்கையில் — தன்
மகள் கடமை செய்ய, மட்டுவில் மண்ணில்
சங்கமமான தந்தையே!
தங்களின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**ஆசிரியர் நல்லுறவு மன்றம்,**
**யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.**

(9448)

---

## நன்றி நவிலல்

சண்டிலிப்பாயை வதிவிடமாகக் கொண்ட

அமரர்

### ஆதர் செல்வநாயகம்போல்

(ஆசிரியரும், உப அதிபரும்)

22 - 03 - 1997 அன்று திடீர் மரணமடைந்த செய்தியை அறிந்து, அன்னாரது துயரிலும், நல்லடக்க ஆராதனையிலும் கலந்து, அவரது இழப்பால் செய்வதறியாது திகைத்த எமக்குப் பலவழிகளில் ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்த சகலருக்கும், அதேவேளையில் குறிப்பாக, பண்டத்தரிப்பு கலைமகள், ஜசிந்தா பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுக்கும், மதகுருமாருக்கும், ஏனையோருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு. வே. ஜேம்ஸ் அரியரட்ணாபோல்,**
**திரு., திருமதி வே. பீற்றர் தனராஜசிங்கபோல்.**

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(9451)

---

## இதய அஞ்சலி

### அருட்திரு ச. கில்லறி ஜெபநேசன்

முந்நாள் பேராலய பங்குத் தந்தையும், பேராலய புனித வின்சென்றிடிபோல் சபை புனித சூசையப்பர் பந்தியின் முன்னாள் ஆன்ம ஆலோசகருமான **அருட்திரு ச. கில்லறி ஜெபநேசன் அடிகளாரின்** மறைவையொட்டி, எமது இதயபூர்வமான அஞ்சலிகளை செலுத்துகின்றோம். ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**புனித வின்சென்ற் டி போல் சபை,**
**புனித சூசையப்பர் பந்தி,**
**யாழ். பேராலயம்.**

● யாழ். புனித மரியாள் பேராலயத்தில் ஆன்ம சாந்தி திருப்பலி **2 - 4 - 97** புதன்கிழமை மாலை புதிய நேரப்படி 5-30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் செபிக்க அழைக்கின்றோம்.

(46085)

---

## கண்ணீர் அஞ்சலி

கலாநிதி (செல்வி)

### கீர்த்தி சிரோன்மணி இராஜரட்ணம்

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியரும், கொழும்பு கல்வி அமைச்சின் முன்னாள் பணிப்பாளரும், திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகத்தின் பணிப்பாளரும், திருகோணமலை, வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசகரும்.)

எமது கல்லூரியில் பூத்துப் புகழ் மணம் பரப்பிய கலாநிதி (செல்வி) இராஜரட்ணம் அவர்கள் 24 - 03 - 1997 அன்று உதிர்ந்த செய்தியினை அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையுமடைந்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

**பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ். வேம்படி மகளிர் கல்லூரி,**
யாழ்ப்பாணம்.

(9450)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 19 — 07 — 1906



இறப்பு: 01 — 04 — 1996

### திருமதி சின்னம்மா கணேசபிள்ளை

பாசத்தின் திருவுருவாய், எமது ஒளி விளக்காய் திகழ்ந்த தங்களை அன்புடன் நினைவு கூருகிறோம்.

**சு. திருச்செல்வம் (வளர்ப்புமகனும், மருமகனும்),**
**சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.**

இராமர் வளவு,
சுன்னாகம்.

(46083)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலில் உள்ளோரில் 40 பேர் குறித்த விவரம்

'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போதும் பின்னரும் கைதாகி காங்கேசன்துறையிலும் நாட்டின் தென்பகுதியிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 170 க்கும் மேற்பட்டோரின் பெயர், முகவரி மற்றும் அவர்கள் தொடர்பான கோவை இலக்கங்கள் போன்ற விவரங்கள் அடங்கிய பட்டியல் கிடைத்திருப்பதாக புளொட் அமைப்பின் யாழ். பணிமனை அறிவித்துள்ளது.

பட்டியலில் உள்ளோரின் உறவினர்களை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு 5 ஆம் இலக்கத்தில் உள்ள பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் — இப்பட்டியலில் உள்ளோரை நேரில் சென்று பார்வையிடவும், அவர்களின் விடுதலைக்கான முயற்சிகளில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும். புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

பட்டியலின் முதல் தொகுதியாக 40 பேரின் பெயர், ஊர் விவரங்கள் இங்கு பிரசுரமாகி உள்ளன.

ஏனையவை பின்னர் பிரசுரமாகும்.

★ சிவாஜி ராஜ்மோகன் — கட்டுடைவெளி, மானிப்பாய்.

★ சிவகுருநாதன் விஜயகுமார் — சம்மட்டிமலை, மானிப்பாய் வடக்கு.

★ யேசுதாசன் ஜெகன் — மானிப்பாய் வீதி.

★ செல்லத்துரை அசோக்குமார் — சுதுமலை வடக்கு, சாவற்கட்டு.

★ கனகராசா ஞானசம்பந்தன் — சுதுமலை வடக்கு.

★ சிவராசா சிவகுமார் — சுதுமலை மேற்கு.

★ மகாதேவன் கிருஷ்ணக்குமார் — சுதுமலை மேற்கு.

★ வேலுப்பிள்ளை விக்னராசா — உடுவில் ரோட், மானிப்பாய்.

★ குமாரசுவாமி இராஜசிங்கம் — கூழாவடி கிழக்கு, மானிப்பாய்.

★ இரத்தினம் நாகரத்தினம் — சுதுமலை வடக்கு.

★ பழனி றெபேசன் — மேதர் வீதி, மானிப்பாய்.

★ லிங்கம் மானிக்கோல் — நவாலி வடக்கு.

★ பாலமுரளி ஜெயவாணி — நவாலி வடக்கு.

★ கந்தசாமி ஜெயபாஸ்கரன் றூற் இல்லம் நாவலடி வீதி, மானிப்பாய்.

★ பெக்ஷன் ராஜ்குமார் — இல. 82 கட்டுடை மானிப்பாய்.

★ இராஜேந்திரன் அபிராணி — நவாலி வடக்கு.

★ நடராசா ஜோதிகரன் — சந்தை மேற்கு, மானிப்பாய்

★ தேவதாஸ் வெஸ்றின் வொயிஸ் — அந்தோனியார் தேவாலயம் அருகாமையில் மானிப்பாய்

★ வரவீரசிங்கம் சந்திரமோகன் — நவாலி வடக்கு

★ காசிநாதன் உதயநாதன் — நவாலி வடக்கு

★ தர்மலிங்கம் இராமச்சந்திரன் — சோதி வேம்படி வீதி, மானிப்பாய்

★ முருகையா அசோக்குமார் — நவாலி வடக்கு, புலவர் முகாம், மானிப்பாய்

★ ஜோசப் பீற்றர் கொல்வின் — சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்

★ சண்முகநாதன் வசந்தகுமார் — புலவர் வீதி, நவாலி கிழக்கு

★ பாலகிருஸ்ணன் பாலசுப்பிரமணியம் — சுதுமலை கிழக்கு

★ செல்வராசா நகுலேஸ்வரன் — தாளா வீதி, நவாலி

★ கணேஸ் ராஜ்குமார் — குருக்கள் கோயிலடி, நவாலி கிழக்கு

★ கணேசமூர்த்தி தங்கராசா — நவாலி வடக்கு

★ தம்பிரத்தினம் ஸ்ரீகாந் — நவாலி வடக்கு, பத்திரகாளி அம்மன் கோயிலடி ஆனைக்கோட்டை

★ பொன்னுச்சாமி பரமேஸ்வரன் — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை

★ இரத்தினம் துரைநாயகம் — மானிப்பாய் வீதி, கூழாவடி, ஆனைக்கோட்டை

★ தங்கராசா யோகராசா — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை

★ கோபால் இராஜேந்திரன் — சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.

★ சின்னத்தம்பி ஸ்ரீ சந்திரன் — சுதுமலை வடக்கு, மானிப்பாய், ஆனைக்கோட்டை.

★ சின்னத்துரை புஸ்பராணி (ராதா), — சுதுமலை வடக்கு, சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.

★ கந்தையா சிவதாசன் — புளியன் வீதி, ஆனைக்கோட்டை.

★ பெருமாள் பாக்கியம் — சங்கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை.

★ இராமசாமி பாக்கியராஜ் — அரியாலை மடம், ஆனைக்கோட்டை.

★ பா. சிவபாக்கியம் — அரியாலைமடம், ஆனைக்கோட்டை.

★ பொன்னுச்சாமி சந்திரா — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ நடராசா சிவக்குமார் — சுதுமலை வடக்கு, ஆனைக்கோட்டை.

# தொழிற்சாலைகழிவுகள் களனி ஆற்றில்கலந்தன

கொழும்பு, ஏப்ரல் 1

பியகமவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் இருந்து வெளியேறிய கழிவுகள் களனி ஆற்றில் கலந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து அம்பத்தலையில் இருந்து பாரிய கொழும்பு பிரதேசத்துக்கான நீர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டது.

எனினும் அம்பத்தலையில் இருந்து கொழும்புக்கான நீர் விநியோக சனி இரவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

பியகம ஏற்றுமதி வலயத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் இருந்து பெருமளவு வெளியேறிய கழிவுப் பொருள்களே களனி ஆற்றில் கலந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பத்தலையில் உள்ள நீரின் தன்மை குறித்து தொடர்ந்து நிபுணர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

களனி ஆற்றின் நீரில் நச்சுத்தன்மை பரிசோதிக்கப்பட்டு வருவதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை — களனி ஆற்றில் தொழிற்சாலைக் கழிவுகள் கலந்தது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அம்பத்தலையில் உள்ள நீரில் நச்சுத்தன்மை இல்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உறுதியாகத் தெரிவித்தார்.

பியகம வலயத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் ஆகியோருடனான அவசர கூட்டம் ஒன்றை அமைச்சர் கூட்டியுள்ளார். இக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி உத்தரவிட்டுள்ளார். (இ-ஐ)

# 7 வயது சிறுமிக்கு தொழுநோய் அறிகுறி

திருநெல்வேலி, ஏப். 1

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கிராமம் ஒன்றில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் பரிசோதனையின் போது நான்கு பேருக்கு தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து அவர்களுக்கு அதற்கான வைத்திய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அவர்களில் ஏழு வயதுடைய சிறுமி ஒருவரும் 12, 14 வயதுடைய இரு சிறுவர்களும் அடங்குவர்.

யாழ். சுகாதார கல்வி உத்தியோகத்தர் எஸ். இராஜேந்திரா மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அலுவலர்கள் மற்றும் சிரமதானத் தொண்டர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இப்பரிசோதனையை மேற்கொண்டார். (இ-135)


## பொன்னான வாய்ப்பு

## அஷ்டலக்ஷ்மி தினத்தாள் புளொக்

சகாயவிலை ரூபா 50/-
(1-4-97 தொடக்கம் 14-4-97 வரை)
எல்லா விவரங்களும் அடங்கிய கொம்பியூட்டர் கொழும்புத் தயாரிப்பு.

கிடைக்குமிடங்கள்:
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி.
சிவசக்தி அறிவொளி புத்தக நிலையம்
கைதடிச் சந்தி. (46088)


## ஈராண்டு நினைவலைகள்



மலர்வு: 04 — 06 — 1976

உதிர்வு: 01 — 04 — 1995

### செல்வி ஸ்ரீதாரணி நடராசா (பேபி)

திதி: 08 - 04 - 1997

எங்கள் ஆருயிர் அருமைப் புதல்வி எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் உள்ளத்திலிருந்து உதிராத பாசத்தின் உறைவிடமே! வாசமலராக மணம் பரப்பி பேர் பெற்றுப் பெருவாழ்வு தேடும் வேளையிலே எங்கள் கனவுகளை சுட்டுப் பொசுக்கி விட்டுப் பாழும் விதி பாதியிலே உன்னை ஏன் வந்து அழைத்துச் சென்றது? உன் பிரிவால் நித்தம் நாம் மெழுகாக உருகிக் கண்ணீரில் கரைகின்றோம்.

பேபி! குறிஞ்சி மலராக மலராயா? இறைஞ்சுகின்றோம் உனது ஆத்மா இறைவனடியில் அமைதி பெற.

உனது பிரிவால் துயருறும்:
உன் அன்புப் பெற்றோர், அண்ணா குடும்பம்,
சகோதரர்கள், அம்மம்மா, பெரியம்மா குடும்பம்,
அன்ரி குடும்பம், சித்தி குடும்பம்,
உறவினர், நண்பர்கள்.

துர்க்காபுரம்,
மல்லாகம். (46089)


# INSTITUTE of INFORMATICS STUDIES

JAFFNA, SRI-LANKA.

NEXT SESSIONS STARTING ON 5th APRIL 1997

★ **COMPUTER COURSES:**

1) TURBO PASCAL
2) TURBO PROLOG
3) TURBO C/C++
4) LOTUS 123
5) d BASE III +
6) BASIC

★ **SHORT HAND & TYPE WRITING**

★ **ENGINEERING DRAWING**

★ **DIPLOMA IN SOFTWARE TECHNOLOGY** (Special graduation Course)

**COURSE CONTENTS:**

- Introduction to Computers
- TURBO PASCAL / Q BASIC
- TURBO C/C++
- d BASE III +
- LOTUS 123
- Data Structures
- Software Techniques
- Data Base Management System
- Software Engineering
- Systems Analysis and Design
- Digital Computer Electronics
- Micro Computer Systems
- Technical English
- Project Work
- Internal Training

**Entry Reqnirement:** 3 Pass (S) at A/L

**Duration** Full Time: 12 Months / Part Time: 15 Months

**Course Fee:** Rs. 18,000 - 00

**Syllabus Including ACS & ICS**

For further details contact:

**IIS COMPUTER TRAINING CENTRE**
★ 68, Clock Tower Road, Jaffna.
★ Navalar Madam, Nelliyady.

★ Payment can be made in instalments
★ 5 % discount on full payment

(46073)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு விவாதம் முடியமுன் சரத்துக்களை வெளியிட்டது சரியா?

## பீரிஸுக்கு எதிராக ஐ. தே. க. ஒழுங்குப் பிரேரணை

கொழும்பு, ஏப். 1

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழு தனது விவாதத்தை முடிக்காத நிலையில் அதிகாரங்கள் தொடர்பான 18 சரத்துக்களை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸ் வெளியிட்டதைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக ஒழுங்குப் பிரேரணை ஒன்றை ஐ. தே. க. கொண்டு வரவிருக்கிறது.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் விவாதத்தில் உள்ள ஒரு விடயத்தை பகிரங்கமாக அறிவிப்பது நாடாளுமன்ற நிலையியற் சட்டங்களை மீறும் செயல் என்றும் ஐ.தே. க. தெரிவித்துள்ளது.

அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட 18 சரத்துக்களுக்கும் ஐ தே. க. ஆதரவு கொடுக்கவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது

நாடாளுமன்ற நிலையியற் சட்ட ஒழுங்கை மீறியதற்காக உயர் நீதிமன்றத்தில் கூட வழக்குத்தாக்கல் செய்ய முடியும் என்றும் ஐ. தே. க. தெரிவித்தது. (இ-3-150)

## மாநாடு

இலங்கை பல் வைத்தியர் சங்கத்தின் அனுசரணையுடன் ஆசியபசுபிக் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த பல் வைத்திய துறையினரின் 19 ஆவது மாநாடு கொழும்பில் நாளை 2ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய பல் வைத்திய நிபுணர் செல்வி உமா சிவபாதசுந்தரம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பதாக அறியப்படுகின்றது. (இ-135)

## கிரிக்கெட் போட்டியை அடுத்து மாணவர்களிடையே மோதல்

### கொழும்பு ஆஸ்பத்திரியும் சேதம்

கொழும்பு, ஏப். 1

இரு பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் பின்னர் மாணவர்களிடையே மூண்ட மோதல்களின் போது கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி மாணவர்களால் சேதமாக்கப்பட்டிருக்கிறது.

ஆனந்தா கல்லூரிக்கும், நாலந்தா கல்லூரிக்கும் இடையிலான இந்த கிரிக்கெட் போட்டி சனியன்று முடிவடைந்த சமயமே மோதல் மூண்டது.

கிரிக்கெட் வீரர்கள் ஆட்டம் முடிந்து பவிலியனுக்குத் திரும்பிய பின்னர் இரண்டு பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் கோஷ்டி மோதலில் ஈடுபட்டனர்.

காயமடைந்த இரு மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுடன் அங்கு சென்ற மாணவர் கும்பல்கள் ஆஸ்பத்திரி ஊழியர்களுடன் வாக்குவாதப்பட்டனர்.

அதனை அடுத்து ஆஸ்பத்திரி வளாகத்துக்குள்ளும் மோதல்கள் இடம் பெற்றன.

காயமடைந்த மாணவர்களை ஏற்றிச் சென்ற இரு வாகனங்களை வைத்தியசாலை வளவுக்குள் அனுமதிக்க பாதுகாப்பு ஊழியர்கள் மறுத்ததைத் தொடர்ந்தே ஆஸ்பத்திரி ஊழியர்கள் மீது மாணவர்கள் தாக்குதல் நடத்தினர்.

மதுபோதையில் காணப்பட்ட சில மாணவர்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு டாக்டர்களும், ஊழியர்கள் சிலரும் காயமடைந்தனர் — என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி விபத்துச் சேவைப் பிரிவின் உபகரணங்கள், உடைமைகள் மாணவர்களால் சேதப் படுத்தப்பட்டன.

காயமடைந்த வைத்தியசாலை ஊழியர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மருதானைப் பொலீஸார் விசாரணைக்காக ஐந்து மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

இதற்கிடையில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சனிக்கிழமை இடம்பெற்ற மோதலில் தமது மாணவர்கள் எவரும் சம்பந்தப்படவில்லை என்று நாலந்தா — ஆனந்தா கல்லூரிகளின் அதிபர்கள் நேற்று அறிவித்துள்ளனர்.

ஆனால் தமது செய்தியாளர்களால் தரப்பட்ட செய்தி சரியானதே என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (ஐ)

## கோரிக்கை

திருநெல்வேலி ஏப். 1

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த பல வருடங்களாக தற்காலிகமாக கடமையாற்றிவரும் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்றும் —

சங்கத்திலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்றும் —

கூட்டுறவு ஊழியருக்கென வெளியிடப்பட்ட புதிய சம்பளத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றும் — சங்க நிர்வாகத்தை கேட்டுக் கொள்ளும் தீர்மானங்கள் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பண்டத்தரிப்புக் கிளையில் விசேட பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. (இ-135)

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

நெடுந்தீவு, ஏப். 1

பௌர்ணமி தினங்களில் கலை நிகழ்ச்சிகள். பட்டி மன்றங்கள் போன்ற பயனுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் —

இதற்கு வேண்டிய உதவிகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் — நெடுந்தீவுக்கு வருகை தந்த சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. தவலிநாயகன் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டுக்கான நன்கொடைகளை சனசமூக நிலையங்களுக்கு வழங்குமாறும் அவர் சிபார்சு செய்துள்ளார். (இ-111)

## தொண்டாவுக்குள்ள ஒரே வழி ஐக்கிய தேசியக்கட்சியில் சேருவதே

### அனுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, ஏப்பரல் 1

''அமைச்சர் தொண்டமானின் எதிர் காலம் அவர் ஐ. தே. க வில் சேர்வதில் தான் தங்கியுள்ளது.''

இப்படி ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்கா தெரிவித்தார்.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக தொண்டமான் மலையகத்தில் தமது செல்வாக்கை இழந்துள்ளார். அவருக்கு மலையகத்தில் செல்வாக்கு இல்லை என்பதையே தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

தமது தலைமைப் பதவியை தமது பேரனுக்கு கொடுக்க அவர் விரும்புகிறார். தொண்டமானுக்கு ஐ தே. க வில் சேர்வதைத் தவிர வேறு வழி இல்லை —

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

## கையொப்பம்

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல சமாதான நீதிவான்களினதும் மாதிரிக் கையொப்பத்தை அந்தந்தப் பிரதேசச் செயலாளர்கள் மூலம் யாழ். மாவட்ட போக்கு வரத்து உதவி ஆணையாளர் கோரியுள்ளார். (இ-30)

## முற்பணம்

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு எதிர் வரும் தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு ஆயிரத்து 500 ரூபா பண்டிகை முற்பணம் வழங்கப்படவுள்ளது. (இ-135)

## பகிரங்க அறிவித்தல்

1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி மரணமெய்திய கொக்குவில் மேற்கு, அரசடி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற **சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி** அவர்கள் விட்டிறந்த பின்வரும் அசையாச் சொத்து வங்கிப்பணம் தொடர்பாக இதனால் யாவருக்கும் அறியத்தருவதாவது:-

காலஞ்சென்ற குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி அவர்கள் தனக்குச் சொந்தமாகவிருந்த அசையா ஆதனமாகிய ''பரியனாலடி'' எனும் ஆதனத்தையும் வங்கிகளில் இருந்த நிரந்தர வைப்பு பணங்களையும் அதன் மூலம் வரும் வருமானங்களையும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய பாலசுப்பிரமணியம் தவபாலன் ஆகிய எனது முகதாவில் 1994 ஆம் ஆண்டு 02 ஆம் மாதம் 11 ஆம் திகதி நிறை வேற்றிய 1343 ஆம் இலக்க மரண சாதனத்தால் இணுவில் தெற்கு ராஜ் மஹாலைச் சேர்ந்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்பவருக்கு ஈகை செய்துள்ளார். இம் மரண சாதனம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை தற்போது குறித்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் அவர்கள் மேற் கொண்டு வருகிறார் என அறியத் தருகிறேன்.

எனவே குறித்த காலஞ் சென்ற சுப்பிரமணியம் கைம்பெண்கண்மணியின் அசையா ஆதனம் தொடர்பாகவோ அவரது பெயரில் வங்கிகளில் உள்ள நிரந்தர வைப்பு பணம், அதன் வருமானங்கள் தொடர்பாகவோ மரணசாதனத்தின் பிரகாரம் குறித்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்பவருக்கே தனித்து உரித்துள்ளது என்றும் குறித்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் தவிர்ந்த வேறு யாருக்கும் குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி பெயரில் உள்ள நிரந்தர வைப்பு பணத்தையோ அல்லது அதன் வருமானத்தையோ வங்கிகள் செலுத்த வேண்டாம் என்றும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

மேலும் குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி பெயரில் உள்ள ''பரியனாலடி'' எனும் நாமம் கொண்ட கொக்குவில் மேற்கு அரசடியில் உள்ள சொரியல் ஆதனம் ஒரு பிணக்குக்கு உட்பட்ட ஆதனம் என்றும் அதுதொடர்பாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் எனவே அவ் ஆதனத்தை எவரேனும் அறுதியிற்கு குத்தகைகொடுக்க அல்லது ஏதாவது சாதனவகையால் கையளிப்புச் செய்ய முயன்றால் அதனை அறுதிவாங்கவோ குத்தகை ஏற்கவோ வேண்டாமென்றும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

இவ்வறிவித்தலை அலட்சியம் செய்து மேற் கூறிய விடயங்கள் தொடர்பாக எவரேனும் செய்து கொள்ளும் செயல்களுக்கு அவர்களே தனித்தும் ஒருமித்தும் பொறுப்பு ஏற்க வேண்டும் எனவும் மேலும் அறியத் தரப்படுகிறது.

**பாலசுப்பிரமணியம் தவபாலன்**
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
சத்திய ஆணையாளரும்.

185/4, கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/400)

### தென்னிலங்கைத் தலைவர்கள் மதம் மாறியபோது

## தமிழ் மக்கள் தமது தலைவர்களை மதம் மாறும்படி கேட்கவில்லை

### தந்தை செல்வா நினைவு ஆராதனையில் பேராயர் உரை

யாழ்ப்பாணம், ஏப் 1

''டொனமூர் அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பின்னர் பழம் பெரும் சிங்கள அரசியல் தலைவர்கள் பலர் அங்கிலிக்கன் கிறிஸ்தவ சமயத்தை கைவிட்டு பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டனர். ஆனால் தமிழ் மக்கள் தமது தலைவர்களை மதம் மாறும்படி கேட்கவில்லை''

இவ்வாறு தெரிவித்தார் தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீன பேராயர் அதிவண கலாநிதி ஜெபநேசன் அடிகளார்.

கடந்த சனிக்கிழமை தென்னிந்திய திருச்சபையின் உடுவில் தேவாலயத்தில் நடந்த செல்வ நாயகத்தின் 99வயது நிறைவு நன்றி செலுத்தும் ஆராதனையில் அவர் உரையாற்றினார்.

பேராயர் தொடர்ந்து உரையாற்றுகையில். தந்தை செல்வாவின் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு பெருமை அளித்தது.

தென் இலங்கை அரசியல் தலைமைகள் பலர் கிறிஸ்தவ மதத்தைத் துறந்து பௌத்தர்களாக மதம் மாறிய போது தமிழ்ப் பிரதேசங்களில் அந்த நிலை ஏற்படவில்லை. தமிழ் மக்கள் குறுகிய எண்ணத்துடன் செயற்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.

திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு பின்னர் எழுதிய கடிதம் ஒன்றில் தந்தை செல்வா இது குறித்து பிரஸ்தாபித்திருந்தார்.

இப்படிப் பேராயர் கூறினார்.

சா. ஆ. தருமரத்தினம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

மரபுவழித் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கும், அதன் மாண்பிற்கும் ஊறுபாடு நேரிட அனுமதியாது காப்பதே தமிழ் மக்கள் தந்தை செல்வாவுக்குச் செய்யக் கூடிய உயர்ந்த கைம்மாறாகும்.

தேசிய தனித்துவம் மட்டுமே போதுமானதல்ல; ஆள்புலம் இல்லாத மக்கள் வெறுமனே சிதறிப்பரவிய கூட்டமாகவே இருப்பர். எனவே தமிழ் மக்களின் ஆள்புலமாக அவர்களது மரபுவழித் தாயகக் கோட்பாட்டை ஆரம்பம் முதலே தந்தை செல்வா வலியுறுத்தி வந்தார்,

இலங்கையின் முன்னாள் மூன்று பிரதமர்களான டட்லி சேனாநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருடனும் தமிழர்களின் மரபுவழித் தாயகம் தொடர்பான தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடாமல், தமிழர்களின் மரபுவழித் தாயகத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்களிடமிருந்து உறுதி மொழிகளைப் பெறுவதிலும் தந்தை செல்வா வெற்றியீட்டியிருந்தார். [illegible] எஸ். சகாயசீலனும் உரையாற்றினார். (இ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேர்தலும் போரும்

எதிர் வரும் ஒகஸ்ட் மாதத்தில் அனேகமாகப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றே கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் பெரிதும் நம்புகின்றன. தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்க உயர்மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு இப்போது நாடாளுமன்றத்தில் உறுப்பினர் பலம் மிகவும் மட்டுமட்டானது. உண்மையில் அது நூலிழையில்தொங்கிக் கொண்டிருக்கின்றது. எதிர்க்கட்சி வரிசையில் உள்ள தமிழ்க் கட்சிகளின் வாக்குகளை நம்பியே, அவற்றின் ஆதரவுடனேயே ஆட்சியை நடத்துகிறது,

ஆளும் கூட்டணியில் ஓர் அங்கத்துவக்கட்சியான சிறிமானி லலித் அத்துலத் முதலியின் கட்சிக்கும் அரச தலைமைப் பீடத்துக்கும் இடையில் ஏற்கனவே முறுகல் நிலை தோன்றிவிட்டது. உள்ளூராட்சித் தேர்தலின் போது, முறுகல் வெடித்து கூட்டு முறிந்துவிடும் நிலை உருவாகியிருக்கிறது.

ஆகையால் அரசாங்கம் நிம்மதியாக, தனது திட்டங்களை தடங்கல் இன்றி நிறைவேற்றி, சுமுகமாக ஆட்சி நடத்துவதற்குத் தனது சொந்தக் காலில் நிற்பது அவசியம். அதன் பொருட்டு பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு உத்தேசிப்பது அதனைப் பொறுத்தவரையில் தவிர்க்க முடியாததே.

மேலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அதிகாரப் பரவலாக்கல் பொதியை, அதில் உள்ள பல அம்சங்களை பிரதான அம்சங்களை ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிமானி கட்சியும் எதிர்க்கின்றன. குறிப்பாக ஒற்றையாட்சி முறையை நீக்கும் முடிவை எதிர்க்கின்றன.

ஆகையால் இப்போதைய நிலையில் அதிகாரப் பரவலாக்கல் பொதியை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது என்பது மிகவும் கடினமான காரியமாகவே இருக்கும். பொதுத் தேர்தலை நடத்தித் தனது பலத்தைப் பெருக்கிக் கொண்டால், தனது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டால், தீர்வுப் பொதியை நிறைவேற்றுவது இலகுவானதாக இருக்கும் என்று அரச தலைவர்கள் கருதுகின்றார்கள் போலும்!

1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வு எது என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இம்முறை தேர்தலில் அரசு தனது பொதி குறித்து மக்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும் தனது நிலைப்பாடு குறித்து கண்ணாமூச்சி ஆடாமல் தெளிவாகச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வரும்.

எல்லாம் சரி தான். போரினை நிறுத்தாமல் அதனைத் தொடர்ந்து கொண்டு பொதுத் தேர்தல் வைப்பது சரிதானா? அது ஜனநாயகமாகுமா? தேர்தலினூடு தீர்வு காண விழைந்தால் போரினூடு சமாதானம் என்ற நிலைப்பாடு பொருந்துமா? அது வரையாவது, இடைக்காலத்திலாவது போரினை நிறுத்தக் கூடாதா?

# சலுகைகளுக்காகப் போராட்டத்தை தாரைவார்க்காமல் செயற்படுவோம்

## செல்வா நினைவு தினத்தை ஒட்டி டக்ளஸ் செய்தி

யாழ்ப்பாணம், ஏப். 1

தந்தை செல்வா நினைவு தினத்தை ஒட்டி ஈ. பி. டி.பி. செயலாளர் நாயகம் விடுத்த செய்தியின் விவரம் வருமாறு:-

தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய எழுச்சிக்கு வித்திட்டவர் தந்தை செல்வா. அன்று போட்ட விதை தான் இன்று விருட்சமாகி நிற்கிறது.

ஆயிரமாயிரம் இளைஞர்களின், யுவதிகளின் இரத்தத்தாலும் இன்னுயிர்களாலும் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் உரமிடப்பட்டு வளர்ந்தது.

தந்தை செல்வா தலைமையில் எத்தனையோ அறவழிப் போராட்டங்கள் நடைபெற்றன.

குண்டாந்தடிகளாலும், கற்களாலும், பூட்ஸ் கால்களாலும் அந்தப் போராட்டங்கள் இரத்தம் சிந்த வைக்கப்பட்டன.

தமிழ்ப்பேசும் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? என்று கேட்டு ஆட்சியாளர்கள் கேலி செய்தனர்; அல்லது ஒப்பந்தங்களை எழுதிவிட்டு கிழித்து காற்றில் வீசினர்.

அறவழிப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்கத் தவறிய ஆட்சியாளர்களால் மனம் நொந்து போன தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களை இனிமேல் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார்.

இளைஞர்களின் உணர்வுகளுக்கு, கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடத்தியவர் தந்தை செல்வா. ஓர் இலட்சியத்தை அடைய பல வழிகள் இருக்கலாம்; பல்வேறுபட்ட போராட்ட வடிவங்கள் இருக்கலாம். அவற்றின் இடையே ஒரு தொடர்பை, உறவை ஏற்படுத்தி தலைமை வகித்துச் செல்பவன்தான் தலைவன்.

தந்தை செல்வாவின் தலைமைத்துவம் என்பது தனியே அறவழிப் போராட்டம் மட்டுமே என்ற கட்டத்தை தாண்டத் தொடங்கிய நேரத்தில்தான் அவரை நாம் இழந்தோம்.

அதனால்தான் அமைதிப் போராட்டங்களையும், ஆயுதப் போராட்டத்தையும் ஒருங்கே வழிநடத்தக்கூடிய பொதுவான தலைமையை நாம் பெறமுடியாமல் போனது.

அமைதி வழியில் செயற்பட்ட அரசியல்வாதிகளும் தவறு செய்திருக்கின்றார்கள்; தடம்மாறி, திசைமாறி சென்றும் இருக்கிறார்கள். அதேபோல ஆயுதப்போராட்டப் பாதையில் சென்றவர்களும் தவறுகள் விட்டுள்ளனர்; தமக்குள் மோதி திசை மாறியும் உள்ளனர்.

ஆனாலும், தமிழ்ப் பேசும் மக்களுக்குக் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்று கூறிய நிலை மாறி, தமிழ்ப்பேசும் மக்களுக்கு பிரச்சினை இருக்கிறது; அரசியல் தீர்வுதேவை என்பதை உணரவைக்க உலகின் பார்வையே இங்கே திரும்பும் அளவுக்கு செய்திட காரணமாக அமைந்தது ஆயிரமாயிரம் இளைஞர்கள் சிந்திய குருதிதான என்பதை மறக்கக்கூடாது.

எனவே — நாம் இன்று செய்ய வேண்டியதெல்லாம், அமைதி வழி மூலமும், ஆயுதப் போராட்ட பாதை மூலமும் வளர்த்து உரமாக்கப்பட்ட நம் போராட்டத்தை அற்ப சொற்ப சலுகைகளுக்காகத் தாரைவார்க்காமல் நிமிர்ந்து நிற்பதுதான்.

நாங்கள் அகிம்சைவாதிகள், நாங்கள் தீவிரவாதிகள், யார் பெரியவர்கள் என்று சண்டை போட்டு பிரிந்து நிற்பதால் பயன் இல்லை. அவ்வாறு பிரிந்து நின்றுகொண்டு தந்தை செல்வாவின் பெயரை உச்சரிப்பது அர்த்தமற்றது.

யாருடைய பங்களிப்பையும் யாரும் மறுக்கக்கூடாது. மறைக்கக்கூடாது. கடந்த காலத்தில் விட்ட தவறுகளை திருத்திக்கொண்டு நிகழ்காலத்தில் கைகோர்ப்போம்; எதிர்காலத்தை ஒளியூட்டுவோம். ஒற்றுமை என்பது கைவிளக்குப் போன்றது. அது இல்லாவிட்டால் பாதையும் தெரியாது, பயணமும் இலக்கைப் போய்ச் சேராது.

எனவே,ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ள மற்றும் அமைதி வழியில் செயற்படுகின்ற தமிழ்க் கட்சிகள் முதலில் ஒன்றுபட வேண்டும். அதன் மூலமே தந்தை செல்வாவுக்கு உண்மையான நினைவஞ்சலியைச் செலுத்த முடியும்.

தந்தை செல்வாவின் கனவு தமிழ்ப் பேசும் மக்களின் கௌரவமான வாழ்வு தான். அந்த கௌரவமான வாழ்வுக்கான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு ஒரே குரலில் பேசக்கூட தயாராக இல்லையென்றால், தந்தை செல்வாவின் பெயரை உச்சரிக்கக் கூட நாம் அருகதை அற்றவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

நீதியான அரசியல் தீர்வு, நேர்மையான சமாதானம், மேன்மையான வாழ்க்கை என்பவற்றுக்காக தமிழ் அரசியல் சக்திகள் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். அதன் மூலம் தந்தை செல்வாவின் கனவுகள் நனவாக உழைப்போம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## வன்னியிலிருந்து யாழ். வந்த சாவற்காடு மக்கள்

''சாவற்காட்டைச் சேர்ந்தோர் இன்னும் வீடு திரும்பவில்லை'' என்ற தலைப்பில் 24 - 3 - 1997 ஆம் திகதிய உதயனில் வெளியான செய்தி குறித்து —

அப்பகுதிக் கிராம சேவை உத்தியோகத்தர் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

வன்னியிலிருந்து திரும்பி குருநகர் சென், ஜேம்ஸ் வித்தியாலயத்தில் தங்கியுள்ள சாவற்காடு மக்களைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பிரதேச செயலகத்திலிருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு 24-3-97 ஆம் திகதி கடிதம் கிடைத்ததாகவும்—

ஆனால் அக்கடிதம் கிடைக்கும் முன்னரே சம்பந்தப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர் உரிய நடவடிக்கையினை எடுத்திருந்தார் என்றும்—சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

**ஆசிரியர் குறிப்பு:**

23 ஆம் திகதி காலையில் சென். ஜேம்ஸ் பாடசாலைக்கு எமது செய்தியாளர் சென்ற போது சாவற்காட்டைச் சேர்ந்த மக்கள் அங்கு தங்கி நின்றனர். தாம் வீடு செல்ல முடியாதிருப்பதாகவும் கிராம சேவையாளர் வந்தாலே போக முடியும் என்றும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

24 ஆம் திகதி காலையில் எமது செய்தியாளர் அங்கு சென்று சம்பந்தப்பட்ட அதே மக்களிடம் விசாரித்த போது நேற்று (23. 3. 97 இல்), தமது கிராம சேவகர் வந்து பொறுப்பெடுத்ததாகவும், அன்று (24 இல்) தமது ஊருக்குப் போகவுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

மேற்படி பாடசாலையில் தங்கியிருந்த மக்களில் ஏனையோர் இம் மாதம் 21 ஆம் திகதி தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி[illegible] என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# 4 'ஏ' சித்தி பெற்ற மாணவருக்கு இலவச சுற்றுலா

யாழ்ப்பாணம், ஏப். 1

கடந்த 96 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் விசேட சித்தி (4 ஏ) பெற்ற யாழ். மாவட்ட மாணவர்கள் நாடளாவிய இலவச சுற்றுலா ஒன்றில் பங்குபற்றவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞான கலாசார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்ள விரும்பும் மேற்படி மாணவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் உறுதிப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் சுற்றுலா இம்மாதம் நடைபெறும்.

(ஐ)

## கோட்ட ரீதியாக அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெறும் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ. தானையா அறிவித்துள்ளார். விவரம் வருமாறு:-

★ நல்லூர்:- இன்று காலை 10. 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில்.

★ யாழ்ப்பாணம்:- நாளை காலை 10. 30 மணிக்கு யாழ். கன்னியர் மடம் ம.வி.

★ ★ ★

தென்மராட்சிக் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

(உ)

# சகல இயக்கங்களும் ஆரம்பத்தில் செல்வா வழிகாட்டலை பின்பற்றின

## நூற்றாண்டு பிறந்த்தின நிகழ்வில் மாணிக்கதாஸன் உரை

யாழ்ப்பாணம், ஏப். 1

'' அனைத்து இயக்கங்களும் ஆரம்பத்தில் தந்தை செல்வாவின் வழிகாட்டலையே பின்பற்றின''

— 'புளொட்' அமைப்பின் உப தலைவரும். செயலதிபருமான என். மாணிக்கதாஸன் இவ்வாறு கூறினார்.

நேற்று யாழ். நகரில் தந்தை செல்வா நினைவுத் தூபி பிரதேசத்தில் நடைபெற்ற — தந்தை செல்வா நூற்றாண்டு பிறந்த தின நிகழ்வில் — உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவ மயமாக்கப்பட்ட இப்பிரதேசத்தில் பாதுகாப்பு விடயம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருந்ததால் அதற்காக இங்கு ஓர் அரசியல் தலைமைத்துவம் அவசியம் தேவை என்று அரசிடம் சுட்டிக்காட்டினோம். ஆனால் அரசு எங்களை இங்கு வர அனுமதிக்காமல், 'வெண்தாமரை இயக்கத்தை இங்கு கொண்டு வந்து அதனை முன்னிலைப்படுத்த முற்பட்டது. பின்னர் காலம் தாழ்த்தியே எம்மை இங்கு செயற்பட அனுமதித்தது.

இன விடுதலைக்காக பல அஹிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்த தந்தை செல்வாவின் நூற்றாண்டுப் பிறந்த தின நிகழ்வை அனுட்டிப்பதில் எமது அமைப்பு பெருமகிழ்வு கொள்கின்றது. தந்தை செல்வாவுக்குப் பின்னர் அடுத்த தலைமைத்துவம் சரியாக வளர்க்கப்படவில்லை. அவரால் வளர்க்கப்பட்ட போராட்டம் பின்னர் ஒன்றிணைக்கப்பட வில்லை; கட்டுப்பாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது; சுயநலமும் பேராசையும் கொண்ட சக்திகளால் போராட்டம் திசை மாறியது.

ஒற்றுமையான செயற்பாடுகளினாலேயே எமது இனம் சுபீட்சமடையமுடியும் என்ற அரசியல் தெளிவு எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது — என்றார்.

வவுனியா நகரசபை உறுப்பினரும், 'புளொட்' அமைப்பின் பிரசாரப பொறுப்பாளருமான கிருபைராஜா, ஈ.பி. ஆர். எல். எவ். இயக்கப் பிரமுகர் மோகன், யாழ். வர்த்தகர் சங்கச் செயலாளர் எஸ். நமசிவாயம், என்.ரி.கணேஷ் உட்பட பலர் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

(உ-15-135)

## நாளை

**பங்குனி 20**

புதன்கிழமை

திதி: நவமி காலை 6.45 வரை.

நட்சத்திரம்: உத்தராடம் பிற்பகல் 12.30 வரை

ஸ்மார்த்த ஏகாதசி

சுபநேரம்: 4.41-6.11

ராகுகாலம்: 12.11-1.41

[illegible]

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த இரண்டாம் பொங்கல் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் வழமைபோல் நடைபெறும்.

★ ★ ★

உடுவில், மல்வம், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது இன்று செவ்வாய்க்கிழமை காலை 10. 30 மணியளவில் அம்பிகைக்கு சங்காபிஷேகம் நடைபெறும். (உ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையை நிரூபித்து காட்ட பிரதமர் கௌடாவுக்கு காலக்கெடு

## இந்திய குடியரசுத் தலைவர் அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 1
இந்திய நாடாளுமன்றத்தின் ஐக்கிய முன்னணி அரசின் பெரும்பான்மையை எதிர் வரும் ஆம் 11]திகதிக்கு முன்னர் நிரூபிக்குமாறு ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா பிரதமர் தேவகௌடாவைக் கேட்டுள்ளார்.

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணி அரசுக்கு வெளியில் இருந்து அளித்து வந்த ஆதரவை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நேற்று முன் தினம் திடீரென விலக்கிக் கொண்டதை அடுத்து பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஆளும் ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளது. இதனால் பெரும் அரசியல் நெருக்கடி உருவாகியிருக்கிறது.

இதேவேளை—

புதிய அரசை அமைப்பது என்ற தனது முடிவை தேசிய காங்கிரஸ் கட்சி முறைப்படியாக அறிவித்திருக்கிறது.

இது தொடர்பான கடிதம் ஒன்றை காங்கிரஸ் கட்சி குடியரசுத் தலைவரிடம் வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது அல்லது தாம் பதவியில் இருந்து விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றுபிரதமர் தேவகௌடா நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நிலைமைகளை ஆராய்ந்து அணுகுமுறைகளை வகுப்பதற்காக ஆளும் ஐக்கியமுன்னணியின் வழிகாட்டல் குழுவின் அவசர கூட்டம் நேற்றிரவு புதுடில்லியில் நடைபெற்றது. (ஐ)

### பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் திரும்பவேண்டும்.

★ தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளையே ஏற்கவேண்டும்.

மேற்படி இரண்டு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசுடன் பேச்சு நடத்தலாம் என்று விடுதலைப் புலிகளின் பிரமுகர் சங்கர் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

அந்த ஆலோசனையையே அரசு தற்போது நிராகரித்திருக்கின்றது.

"ஆயுதங்களைக் களையவும் காலவரம்புடன் பேச்சுக்களை முடிக்கவும் புலிகள் மறுப்பதுதான் பேச்சு நடத்துவதற்கு பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது" — என்று இலங்கை அரசுத் தரப்பில் கூறப்பட்டது. (உ-5)

### கொக்குவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலை அடுத்து, அப்பகுதியில் சற்று நேரம் தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இத்துப்பாக்கி வேட்டுக்களினால் ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் உள்ள வீடொன்றில்—வீட்டுக்குள்— இருந்த பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நவாலியைச்சேர்ந்த ஜோன் பீற்றர் பற்றிமா ரஜனி (வயது 36) என்ற பெண்ணே உயரப்புலத்தில் உறவினர் ஒருவரின் வீட்டுக்குள் இருந்த போது வேட்டுக்கு இலக்கானார்.

இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். (உ-3-15)

### கருணாநிதி...

(முதலாம் பக்கத் தொடர்)

தற்போதைய ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றிருக்கும் தெலுங்கு தேசம், அஸாம் கணபரிஷத் போன்ற கட்சிகளைத் தவிர்த்து தி.மு.க. தமிழக மாநில காங்கிரஸ், ஜனதா தளம் போன்ற கட்சிகளும், காங்கிரஸ் கட்சியும் புதிய கூட்டணி அரசில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய கூட்டணி அரசில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அதிகமாக இருப்பார்கள் என்பதால் அக்கட்சியைச் சேர்ந்தோருக்கு அதிக அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கலைஞர் கருணாநிதி புதிய பிரதமராகப் பதவியேற்றால் தமிழக முதலமைச்சர் பதவியை அவரது மகனும் சென்னை மேயருமான ஸ்டாலின் ஏற்கக் கூடும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை மீண்டும் நரசிம்மராவ் கைப்பற்றுவதற்கான திரைமறைவு வேலைகளில் பிரதமர் தேவகௌடா ஈடுபட்டிருக்கின்றார் என காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி கருதுகின்றார் என்றும் —

அதனாலேயே அவரை பிரதமர் பதவியிலிருந்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட கேசரி முடிவு செய்தார் என்றும் —

புதுடில்லித் தகவல்கள் தெரிவித்தன. (உ)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு ஜெ. ஐ. ஜெயரெட்ணம் அவர்களின்
தாயார்
**திருமதி பரிமளம் ஜோனா அவர்கள்**

வவுனியாவில் காலமானதையிட்டு அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ நோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
(46095)



## கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை
**ச.கில்லறி ஜெபநேசன் அடிகளாரின்**

திடுக்கிடும் மரணச் செய்தி கேட்டு
ஏங்கித் திகில் உற்றோம்! துயரமடைந்தோம்!!
அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் சோதியாய்
என்றும் எம்மை நீங்கா நினைவலையாக
சில்லலையூர் பங்குத் தந்தையாய்ப் பணிபுரியும்
வேளை,
புனித யாகப்பர் ஆலய மணிமுடிக் கோபுரம்
அமைத்து மங்காச் சிறப்புடன் இறைபணித்
தொண்டாற்றி
இறைபதமடைந்த நேசமிகு பாசத் தந்தையே!
உமது ஆன்மா இறைவனோடு இரண்டறக்கலந்து
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சில்லாலை புனித யாகப்பர் ஆலய பங்கு மக்களின்**
**இதய பூர்வ அஞ்சலி!**

புனித யாகப்பர் ஆலய பங்கு மக்கள்
சில்லாலை. (46097)


## துணைவேந்தர் நியமனம்

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி முதல் இந்நியமனம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழங்களின்சீர் திருந்தம் தொடர்பாக மேற்கொள்ளப் படவுள்ள அவசர திட்டத்தைச் செயற்படுத்தும் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை இதுவரை காலமும் பதில் துணைவேந்தராகப் பணியாற்றிவந்தார் (உ-3)

## அ. அட்டைகள் விநியோகம்

ஈச்சமோட்டை (யா/66) கிராம சேவையகளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு பாஷையூர் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### தந்தை. .

[முதலாம் பக்கத் தொடர்]

சுமார் எண்பது அடி உயரமான தூபி, 'புளொட்' அமைப்பால் புனரமைக்கப் பட்டுவர்ணம்தீட்டப்பட்டிருந்தது. தூபியின் சுற்றுப்புறப் பகுதி கறுப்பு, மஞ்சள், சிவப்பு சரிகைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நேற்று முற்பகல்'புளொட்' அமைப்பின் உப தலைவரும் செயலதிபருமான மாணிக்கதாஸன் தூபிக்கும் அங்கு வைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் திருவுருவப் படத்திற்கும் மலர்தூவி மலரஞ்சலி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

மலரஞ்சலி நிகழ்வை அடுத்து 'புளொட்' அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பசுபதி சுரேஷ் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து யாழ். நகரில் தந்தை செல்வா, தியாகி சிவகுமாரன், குட்டிமணி, அமிர்தலிங்கம் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை நிறுவுவதற்கான அடிக்கற்களை நடும் வைபவம் இடம்பெற்றது. (உ-15-135)

# பயணிகள் சேவையில் ஐந்தாவது கப்பல்

இடம்பெயர்ந்த மக்களை திருகோணமலையில் இருந்து வடக்கே ஏற்றிச் செல்லும் பணியில் 'அட்லாண்டிக் கரியர்' என்னும் புதிய கப்பல் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடும் ஐந்தாவது கப்பல் இதுவாகும்.

இக்கப்பல் கடந்த சனியன்று சுமார் 500 பயணிகளுடன் திருமலையில் இருந்து வடக்கிற்கான சேவையை ஆரம்பித்ததாக திருமலை பட்டணமும் சூழலும் பகுதி பிரதேச செயலாளர் வி. வேலும் மயிலும் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் இக்கப்பலை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

ஏற்கனவே 'சஜிந்த', 'தாரகி', 'மிசன்' ஆகிய கப்பல்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பயணிகளை வடக்கே ஏற்றிச் செல்லும் பணியில் "எண்டுரன்ஸ்" என்ற கப்பல் ஈடுபட்டுள்ளது.

## வாசகர்களே! கவனம்!!

இன்று ஏப்ரல் முதலாம் திகதி, ஏப்ரல் முட்டாள் தினம்.

எனவே, வாசகர்களே கவனம். உங்களுக்கு நெருங்கியவர்கள் உங்களை ஏமாற்ற முயற்சிப்பார்கள் எச்சரிக்கையாக இருங்கள்.

உங்களைஏமாற்றும் முயற்சியில் உதாரணத்துக்கு ஒன்று தான் முன்பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'கருணாநிதி புதிய பிரதமர் செய்தி'

### தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் அடியோடு மறுத்து வருகின்றன.

மூன்றாவது புறத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்குப் புறம்பாகத் தங்களுக்குத் தனியான ஆட்சி அலகு ஒன்று தேவை என்கின்றனர் முஸ்லிம்கள்.

இந்த முத்தரப்பினரினதும் கோரிக்கைகள், அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க முடியாது அரசு திணறி வருவதும் தெரிந்ததே

இந்த நிலையில்தான் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குவதற்கான ஆட்சி அலகு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஒன்று கூடி பேசி இணக்கம் கண்டிருக்கின்றார்கள்.

உத்தேச இணக்கத்தின் படி —

★ வடக்கு மாகாணத்துடன் கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் முற்றாக இணைக்கப்படும்.

★ அம்பாறை மாவட்டத்தில் உள்ள அம்பாறை மற்றும் சிங்களப் பிரதேசங்கள் ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படும்.

★ பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை போன்ற முஸ்லிம் பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு என தனி மாகாணசபை உருவாக்கப்படும்.

இதுவே இரு கட்சிகளும் இணக்கம் கண்டுள்ள ஆட்சி அலகு பற்றிய விவரமாகும்.

இந்த விவரங்களை கூட்டணி மற்றும் முஸ்லிம்காங்கிரஸ் தலைவர்களை அழைத்து அண்மையில் ஜனாபதிபதி சந்திரிகா கேட்டறிந்ததாகத் தெரியவருகின்றது.

அண்மையில் கூட்டணியின் மூத்த பிரமுகர்கள் சிலர் ஜனாதிபதியைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்தாலோசனை செய்ததாகவும்—

அப்போதே இந்த ஆட்சி அலகு குறித்து ஜனாதிபதி விரிவாகக் கேட்டறிந்ததாகவும் —

இந்தச் சந்திப்பின் போது மூத்த அமைச்சர்கள் சிலர் உடனிருந்ததாகவும் —

நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டணி — முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரண்டும்இணக்கம் கண்ட ஆட்சி அலகு பற்றிய விடயத்தை அப்படியே அரசின் தீர்வுத் திட்டத்தில் சேர்த்தால் என்ன என்று அரச உயர் பீடம் தற்போது ஆலோசித்து வருவதாக அறியவந்தது. (உ)

## காங்கிரஸ் பிளவு படும்

இந்தியாவில் ஆட்சியிலுள்ள ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை நிறுத்துவதென காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி திடீரென எடுத்த முடிவை அடுத்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள் கடும் கருத்து மோதல்கள் உருவாகியிருப்பதாக புதுடில்லியில் உள்ள பேராசிரியர் எஸ். சிரியானந்த தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடாமல் சீதாராம் கேசரி தனிப்பட எடுத்த முடிவு இது என காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் கருதுகிறார்கள் எனவும், இந்த முடிவால் காங்கிரஸுக்கு அரசியல் ரீதியில் நட்டமே ஏற்படும் என்று பல உறுப்பினர்களிடையே அச்சம் உருவாகியுள்ளதாகவும் நிலைமை மோசமாகி காங்கிரஸ் கட்சி பிளவுபட வாய்ப்புக்கள் உள்ளன எனவும் அவர் பி. பி. ஸிக்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார். (ஐ-10)

### வானொலி...

(முதலாம் பக்கத் தொடர்)

'கிளினிக்கல்' வசதிகளை வழங்குவதற்கும் 'மேர்லின்' நிறுவனம் இணங்கியிருந்தது; அதற்கான திட்டங்களையும், நிதியையும் அது தயார் செய்துவைத்துள்ளது ஆனால் வானொலிக் கருவி பயன்படுத்துவதற்கு அனுமதிவழங்குவது தொடர்பான சர்ச்சையால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படாமல் இழுபறியில் உள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த இழுபறி விவகாரம் தொடர்பாக "மேர்லின்" அமைப்பு வெளியிட்ட நீண்ட அறிக்கை பின்னர் உதயனில் வெளியாகும். (ஐ-உ-10)

### இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்)

நிர்வாக அலுவலகம் அறிவித்திருக்கிறது.

இக்கப்பல் சேவைகளில் 500 பயணிகள் திருமலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 559க்கு உட்பட்டவர்களை காலை 7மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது

நேற்றுடன் ரத்துச் செய்யப்பட்ட 203 முதல் 523 வரையான பட்டியல்களில் இடம் பெற்றிருந்தோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் பயணத்தை மேற்கொள்ள கால எல்லை வழங்கப்பட்டிருப்பதாகவும் —

அதன் பின்னர் எக்காரணம் கொண்டும் அவர்களுக்கான கால எல்லை நீடிக்கப் படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்குரிய பட்டியல் இலக்கம் அறிவிக்கப்பட்டதில் இருந்து அடுத்துவரும் 14 நாள்களுக்குள் பயணத்தை மேற்கொள்ளுமாறு சிவில் நிர்வாக அலுவலகம் பயணிகளை அறிவுறுத்தியுள்ளது. (ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org